**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1002/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அருணாச்சலம் | த–பெ | அண்ணாமலை |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 83/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.06.2025**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சாட்சி காணொளி மூலம் ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் காரைக்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன அழகப்பன் எனது அண்ணன். 08.12.2018 அன்று அவர் மதுரைக்கு சென்று விட்டு வீட்டிற்கு திரும்பும் போது TATA Ace வாகனம் ஒன்று அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக நான் தெரிந்து கொண்டேன். யார் மீது தவறு என்று எனக்கு தெரியாது. நான் அப்போது புதுவயலில் இருந்தேன். எனக்கு சென்னையில் இருந்து போன் வந்தது அதில் பேசிய நபர் அழகப்பாபுறம் சிக்கிரி அருகில் எனது அண்ணனுக்கு சாலை விபத்து ஏற்ப்பட்டிருப்பதாக தகவலை சொன்னார். என்னை அழகப்பாபுறம் காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள். நான் உடனே ஆட்டோ எடுத்து கொண்டு எனது உறவினர்கள் மூலம் காவல் நிலையம் சென்றேன்.

மேலும் சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துமனையில் வைத்திருப்பதாக சொன்னார்கள். நான் அங்கு சென்று பார்த்த பொழுது சிகிச்சை பலன் இன்றி அவர் இறந்து விட்டதாக அங்கு இருந்த மருத்துவர்கள் சொன்னார்கள். நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.18 10:26:59 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி